ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா₃ந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ ஹ்ரு'தி₃ ॥

# ॥ திவ்ய பிரபந்தம் போற்றும் திருநரசிங்கன் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# ॥ திவ்ய பிரபந்தம் போற்றும் திருநரசிங்கன் ॥

## பொது தனியன்கள்

ராமாநுஜ த3யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்3ய பூ4ஷணம் ।
ஸ்ரீமத்3வேங்கடநாதா2ர்யம் வந்தே3 வேதா3ந்ததே3ஶிகம் ॥ 1 ॥

லக்ஷ்மீநாத2ஸமாரம்பா4ம் நாத2யாமுநமத்4யமாம் ।
அஸ்மதா3சார்யபர்யந்தாம் வந்தே3 கு3ருபரம்பராம் ॥ 2 ॥

யோ நித்யமச்யுதபதா3ம்பு3ஜயுக்3மருக்ம-
வ்யாமோஹதஸ்ததி3தராணி த்ருʼணாயமேநே ।
அஸ்மத்3கு3ரோர்ப4க3வதோஸ்ய த3யைகஸிந்தோ4:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்3யே ॥ 3 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ4தி:
ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம் ।
ஆத்3யஸ்ய ந: குலபதேர்வகுளாபி4ராமம்
ஸ்ரீமத் தத3ங்க்4ரியுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா ॥ 4 ॥

பூ4தம் ஸரஶ்ச மஹத3ாஹ்வய ப4ட்டநாத2
ஸ்ரீப4க்திஸார குலஶேக2ர யோகி3வாஹாந் ।
ப4க்தாங்க்4ரிரேணு பரகால யதீந்த்3ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மிநித்யம் ॥ 5 ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு3ருமுக2மநதீ4த்ய ப்ராஹ வேதா3நஶேஷாந்
நரபதிபரிக்லுʼப்தம் ஶுல்கமாதா3துகாம: ।

www.prapatti.com

ஶ்வஶ்ஶுரமமரவந்த்₃யம் ரங்க₃நாத₂ஸ்ய ஸாக்ஷாத்
த்₃விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொரு கால்⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம்⋆- முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம்⋆ கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம்⋆ நெஞ்சமே! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத⋆ வேண்டிய
வேதங்களோதி⋆ விரைந்து கிழியறுத்தான்⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி - திருப்பல்லாண்டு

‡பல்லாண்டு பல்லாண்டு⋆ பல்லாயிரத்தாண்டு⋆
பல கோடி நூறாயிரம்⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!⋆ உன்-
சேவடி செவ்வி திருக்காப்பு (1)

‡அடியோமோடும் நின்னோடும்⋆ பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு⋆
வடிவாய் நின் வல மார்பினில்⋆ வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு⋆
வடிவார் சோதி வலத்துறையும்⋆ சுட-
ராழியும் பல்லாண்டு⋆
படை போர் புக்கு முழங்கும்⋆ அப்பாஞ்ச-
சன்னியமும் பல்லாண்டே (2)

வாழாட் பட்டு நின்றீருள்ளீரேல்⋆ வந்து
மண்ணும் மணமும் கொண்மின்⋆
கூழாட் பட்டு நின்றீர்களை⋆ எங்கள்
குழுவினில் புகுதலொட்டோம்⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள்⋆


www.prapatti.com

இராக்கதர்வாழ்⋆ இலங்கை-
பாழாளாகப் படை பொருதானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (3)

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து⋆
எங்கள் குழாம் புகுந்து⋆
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி⋆
வந்தொல்லைக் கூடுமினோ⋆
நாடு நகரமும் நன்கறிய⋆ நமோ
நாராயணாயவென்று⋆
பாடு மனமுடைப் பத்தருள்ளீர்!⋆ வந்து
பல்லாண்டு கூறுமினே (4)

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி⋆
அசுரர் இராக்கதரை⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த⋆
இருடீகேசன் தனக்கு⋆
தொண்டக் குலத்திலுள்ளீர்! வந்தடி தொழுது⋆
ஆயிர நாமம்சொல்லி⋆
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து⋆ பல்லாண்டு பல்-
லாயிரத்தாண்டென்மினே (5)

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன்⋆
ஏழ் படி கால் தொடங்கி⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்⋆ திரு-
வோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரியுருவாகி⋆
அரியை அழித்தவனை⋆
பந்தனை தீரப் பல்லாண்டு⋆ பல்லாயிரத்-
தாண்டென்று பாடுதுமே (6)

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி⋆
திகழ் திருச்சக்கரத்தின்⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று⋆

www.prapatti.com

குடிகுடி ஆட்செய்கின்றோம்⋆
மாயப் பொருபடை வாணனை⋆ ஆயிரந்
தோளும் பொழி குருதி-
பாய⋆ சுழற்றிய ஆழி வல்லானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (7)

நெய்யிடை நல்லதோர் சோறும்⋆ நியதமும்
அத்தாணிச் சேவகமும்⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு⋆
காதுக்குக் குண்டலமும்⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து⋆ என்னை
வெள்ளுயிராக்க வல்ல⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப்⋆
பல்லாண்டு கூறுவனே (8)

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை
உடுத்துக்⋆ கலத்ததுண்டு⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன⋆
சூடுமித்தொண்டர்களோம்⋆
விடுத்த திசைக்கருமம் திருத்தித்⋆ திரு-
வோணத் திருவிழவில்⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (9)

எந்நாள் எம்பெருமான்⋆ உன்தனக்கடி-
யோம் என்றெழுத்துப்பட்ட-
அந்நாளே⋆ அடியோங்கள் அடிக்குடில்⋆
வீடுபெற்றுய்ந்ததுகாண்⋆
செந்நாள் தோற்றித்⋆ திருமதுரையுள் சிலை-
குனித்து⋆ ஐந்தலைய-
பைந்நாகத் தலை பாய்ந்தவனே!⋆ உன்னைப்
பல்லாண்டு கூறுதுமே (10)

www.prapatti.com

அல்வழக் கொன்றுமில்லா⋆ அணிகோட்டியர் கோன்⋆
    அபிமான துங்கன்-
செல்வனைப்போலத்⋆ திருமாலே! நானும்
    உனக்குப் பழவடியேன்⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று⋆
    நாமம் பல பரவி⋆
பல்வகையாலும் பவித்திரனே!⋆ உன்னைப்
    பல்லாண்டு கூறுவனே (11)

‡பல்லாண்டென்று பவித்திரனைப்⋆ பர-
    மேட்டியை⋆ சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை⋆ வில்லிபுத்தூர் விட்டு-
    சித்தன் விரும்பியசொல்⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்⋆ நமோ
    நாராயணாயவென்று⋆
பல்லாண்டும் பரமாத்மனைச்⋆ சூழ்ந்திருந்-
    தேத்துவர் பல்லாண்டே (12)

## திருநரசிங்கன் பாசுரங்கள்

### பெரியாழ்வார் திருமொழி (1-3) - சீதக்கடல்

பிறங்கிய பேய்ச்சி⋆ முலை சுவைத்துண்டிட்டு⋆
    உறங்குவான் போலே⋆ கிடந்த இப்பிள்ளை⋆
மறங்கொள் இரணியன்⋆ மார்பை முன் கீண்டான்⋆
    குறங்குகளை வந்து காணீரே⋆
1 குவிமுலையீர்! வந்து காணீரே! (5)

### பெரியாழ்வார் திருமொழி (1-6) - உய்யவுலகு

கோளரியின் உருவம் கொண்டவுணன் உடலம்⋆
    குருதி குழம்பி எழக் கூர் உகிரால் குடைவாய்!⋆
மீள அவன் மகனை மெய்ம்மை கொளக் கருதி⋆



www.prapatti.com

மேலை அமரர் பதி மிக்கு வெகுண்டு வரக்⋆
காள நன் மேகமவை கல்லொடு கால் பொழியக்⋆
கருதி வரைக் குடையாக் காலிகள் காப்பவனே!⋆
ஆள! எனக்கொரு கால் ஆடுக செங்கீரை⋆
2 ஆயர்கள் போரேறே! ஆடுக ஆடுகவே (2)

‡அன்னமும் மீன் உருவும் ஆளரியும் குறளும்⋆
ஆமையும் ஆனவனே! ஆயர்கள் நாயகனே!⋆
என் அவலம் களைவாய்! ஆடுக செங்கீரை⋆
ஏழ் உலகும் உடையாய்! ஆடுக ஆடுக என்று⋆
அன்னநடை மடவாள் அசோதை உகந்த பரிசு⋆
ஆன புகழ் புதுவைப் பட்டன் உரைத்த தமிழ்⋆
இன்னிசை மாலைகள் இப்பத்தும் வல்லார்⋆ உலகில்
3 எண் திசையும் புகழ் மிக்கின்பம் அதெய்துவரே (11)

## பெரியாழ்வார் திருமொழி (1-7) - மாணிக்கக்கிண்கிணி

அளந்திட்ட தூணை⋆ அவன் தட்ட⋆ ஆங்கே
வளர்ந்திட்டு⋆ வாள் உகிர்ச் சிங்க உருவாய்⋆
உளந்தொட்டிரணியன்⋆ ஒண் மார்வகலம்⋆
பிளந்திட்ட கைகளால் சப்பாணி⋆
4 பேய் முலை உண்டானே! சப்பாணி (9)

## பெரியாழ்வார் திருமொழி (2-7) - ஆனிரை

குடங்கள் எடுத்தேற விட்டுக்⋆
கூத்தாட வல்ல எம் கோவே!⋆
மடங்கொள் மதிமுகத்தாரை⋆
மால்செய்ய வல்ல என் மைந்தா!⋆
இடந்திட்டிரணியன் நெஞ்சை⋆
இரு பிளவாக முன் கீண்டாய்!⋆
குடந்தைக் கிடந்த எம் கோவே!⋆
5 குருக்கத்திப் பூச் சூட்ட வாராய் (7)

www.prapatti.com

## பெரியாழ்வார் திருமொழி (3-6) - நாவலம்

முன் நரசிங்கமதாகி அவுணன்
    முக்கியத்தை முடிப்பான்⋆ மூவுலகில்
மன்னர் அஞ்ச⋆ மதுசூதனன் வாயில்
    குழலின் ஓசை⋆ செவியைப் பற்றி வாங்க⋆
நன் நரம்புடைய தும்புருவோடு⋆
    நாரதனும் தம் தம் வீணை மறந்து⋆
கின்னர மிதுனங்களும் தம் தம்
6 கின்னரம்⋆ தொடுகிலோம் என்றனரே⋆ (5)

## பெரியாழ்வார் திருமொழி (4-1) - கதிராயிரம்

‡கதிர் ஆயிரம் இரவி⋆ கலந்தெரித்-
    தால் ஒத்த நீள் முடியன்⋆
எதிர் இல் பெருமை இராமனை⋆
    இருக்கும் இடம் நாடுதிரேல்⋆
அதிரும் கழற் பொரு தோள்⋆ இரணியன்
    ஆகம் பிளந்தரியாய்⋆
உதிரம் அளைந்த கையோடிருந்தானை⋆
7 உள்ளவா கண்டார் உளர் (1)

## பெரியாழ்வார் திருமொழி (4-4) - நாவகாரியம்

பூதம் ஐந்தொடு வேள்வி ஐந்து⋆
    புலன்கள் ஐந்து பொறிகளால்⋆
ஏதம் ஒன்றும் இலாத⋆ வண் கையி-
    னார்கள் வாழ் திருக் கோட்டியூர்
நாதனை நரசிங்கனை⋆ நவின்-
    றேத்துவார்கள் உழக்கிய⋆
பாத தூளி படுதலால்⋆
8 இவ்வுலகம் பாக்கியம் செய்ததே (6)

www.prapatti.com

கொம்பினார் பொழில்வாய்க்⋆ குயிலினம்
கோவிந்தன் குணம் பாடு சீர்⋆
செம்பொனார் மதில் சூழ்⋆ செழுங்-
கழனி உடைத் திருக் கோட்டியூர்⋆
நம்பனை நரசிங்கனை⋆ நவின்-
றேத்துவார்களைக் கண்டக் கால்⋆
எம்பிரான் தன் சின்னங்கள்⋆ இவர்
9 இவர் என்றாசைகள் தீர்வனே (9)

## பெரியாழ்வார் திருமொழி (4-8) - மாதவத்தோன்

வல் எயிற்றுக் கேழலுமாய்⋆
வாள் எயிற்றுச் சீயமுமாய்⋆
எல்லை இல்லாத் தரணியையும்⋆
அவுணனையும் இடந்தான் ஊர்⋆
எல்லியம் போதிருஞ்சிறை வண்டு⋆
எம் பெருமான் குணம் பாடி⋆
மல்லிகை வெண் சங்கூதும்⋆
10 மதிள் அரங்கம் என்பதுவே (8)

## பெரியாழ்வார் திருமொழி (4-9) - மரவடியை

உரம் பற்றி இரணியனை⋆ உகிர்
நுதியால் ஒள்ளிய மார் புறைக்க ஊன்றி⋆
சிரம் பற்றி முடி இடியக் கண் பிதுங்க⋆
வாய் அலறத் தெழித்தான் கோயில்⋆
உரம் பெற்ற மலர்க் கமலம்⋆
உலகளந்த சேவடி போல் உயர்ந்து காட்ட⋆
வரம்புற்ற கதிர்ச் செந்நெல்⋆
11 தாள் சாய்த்துத் தலை வணக்கும் தண் அரங்கமே (8)

தேவுடைய மீனமாய் ஆமையாய்⋆
ஏனமாய் அரியாய்க் குறளாய்⋆

மூவுருவில் இராமனாய்⋆ கண்ணனாய்க்
    கற்கியாய் முடிப்பான் கோயில்⋆
சேவலொடு பெடை அன்னம்⋆ செங்கமல
    மலர் ஏறி ஊசல் ஆடி⋆
பூவணைமேல் துதைந்தெழு⋆ செம் பொடி
12 ஆடி விளையாடும் புனல் அரங்கமே (9)

## பெரியாழ்வார் திருமொழி (5-1) - வாக்குத்தூய்மை

நம்பனே! நவின்றேத்த வல்லார்கள்⋆
    நாதனே! நரசிங்கமதானாய்!⋆
உம்பர் கோன் உலகேழும் அளந்தாய்⋆
    ஊழி ஆயினாய்! ஆழி முன் ஏந்தி⋆
கம்ப மா கரி கோள் விடுத்தானே!⋆
    காரணா! கடலைக் கடைந்தானே!⋆
எம்பிரான்! என்னை ஆள் உடைத் தேனே!⋆
13 ஏழையேன் இடரைக் களையாயே (9)

## பெரியாழ்வார் திருமொழி (5-2) - நெய்க்குடத்தை

மங்கிய வல்வினை நோய்காள்!⋆
    உமக்கும் ஓர் வல்வினை கண்டீர்⋆
இங்குப் புகேன்மின் புகேன்மின்⋆
    எளிதன்று கண்டீர் புகேன்மின்⋆
சிங்கப் பிரான் அவன் எம்மான்⋆
    சேரும் திருக்கோயில் கண்டீர்⋆
பங்கப்படாதுய்யப் போமின்⋆
14 பண்டன்று பட்டினம் காப்பே (4)

## ஆண்டாள் - திருப்பாவை

முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று⋆
    கப்பம் தவிர்க்கும் கலியே! துயில் எழாய்⋆

www.prapatti.com

செப்பம் உடையாய்! திறல் உடையாய்⋆ செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயில் எழாய்⋆
செப்பன்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்⋆
நப்பின்னை நங்காய்! திருவே! துயில் எழாய்⋆
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை⋆
15 இப்போதே எம்மை நீராட்டேலோர் எம் பாவாய் (20)

‡மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்⋆
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து⋆
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி⋆
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்⋆
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா⋆ உன்
கோயில் நின்றிங்ஙனே போந்தருளிக்⋆ கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து⋆ யாம் வந்த
16 காரியம் ஆராய்ந்தருளேலோர் எம் பாவாய் (23)

‡கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா!⋆ உன் தன்னைப்-
பாடிப் பறை கொண்டு யாம் பெறு சம்மானம்⋆
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்⋆
சூடகமே தோள் வளையே தோடே செவிப் பூவே⋆
பாடகமே என்றனைய பல் கலனும் யாம் அணிவோம்⋆
ஆடை உடுப்போம் அதன் பின்னே பால் சோறு⋆
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்⋆
17 கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம் பாவாய் (27)

## நாச்சியார் திருமொழி (1-6) - வாரணமாயிரம்

நாளை வதுவை⋆ மணம் என்று நாள் இட்டு⋆
பாளை கமுகு⋆ பரிசுடைப் பந்தற் கீழ்⋆
கோளரி மாதவன்⋆ கோவிந்தன் என்பான் ஓர்⋆
18 காளை புகுதக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (2)

வரி சிலை வாள் முகத்து⋆ என் ஐமார் தாம் வந்திட்டு⋆
எரி முகம் பாரித்து⋆ என்னை முன்னே நிறுத்தி⋆

www.prapatti.com

அரி முகன் அச்சுதன்⋆ கைம்மேல் என் கை வைத்து⋆
19 பொரி முகந்தட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (9)

## நாச்சியார் திருமொழி (1-8) - விண்ணீல மேலாப்பு

வான் கொண்டு கிளர்ந்தெழுந்த⋆ மா முகில்காள்!⋆ வேங்கடத்துத்
தேன் கொண்ட மலர் சிதறத்⋆ திரண்டேறிப் பொழிவீர்காள்⋆
ஊன் கொண்ட வள் உகிரால்⋆ இரணியனை உடல் இடந்தான்⋆
20 தான் கொண்ட சரி வளைகள்⋆ தருமாகில் சாற்றுமினே (5)

## திருமழிசையாழ்வார் - திருச்சந்த விருத்தம்

வால் நிறத்தொர் சீயமாய்⋆ வளைந்த வாள் எயிற்றவன்⋆
ஊன் நிறத்துகிர்த்தலம்⋆ அழுத்தினாய்! உலாய சீர்⋆
நால் நிறத்த வேதநாவர்⋆ நல்ல யோகினால் வணங்கு⋆
21 பால் நிறக் கடல் கிடந்த⋆ பற்பநாபன் அல்லையே (23)

கங்கை நீர் பயந்த பாத⋆ பங்கயத்தெம் அண்ணலே⋆
அங்கை ஆழி சங்கு தண்டு⋆ வில்லும் வாளும் ஏந்தினாய்⋆
சிங்கமாய தேவ தேவ!⋆ தேன் உலாவு மென் மலர்⋆
22 மங்கை மன்னி வாழு மார்ப!⋆ ஆழி மேனி மாயனே! (24)

வரத்தினில் சிரத்தை மிக்க⋆ வாள் எயிற்று மற்றவன்⋆
உரத்தினில் கரத்தை வைத்து⋆ உகிர்த்தலத்தை ஊன்றினாய்⋆
இரத்தி நீ இதென்ன பொய்⋆ இரந்த மண் வயிற்றுளே
23 கரத்தி⋆ உன் கருத்தை⋆ யாவர் காண வல்லர் கண்ணனே! (25)

‡கரண்டம் ஆடு பொய்கையுள்⋆ கரும் பனைப் பெரும் பழம்⋆
புரண்டு வீழ வாளை பாய்⋆ குறுங்குடி நெடுந்தகாய்⋆
திரண்ட தோள் இரணியன்⋆ சினங்கொள் ஆகம் ஒன்றையும்⋆
24 இரண்டு கூறு செய்துகந்த⋆ சிங்கம் என்பதுன்னையே (62)

விள்விலாத காதலால்⋆ விளங்கு பாத போதில் வைத்து⋆
உள்ளு வேனதூன நோய்⋆ ஒழிக்குமா தெழிக்கு நீர்⋆

www.prapatti.com

பள்ளி மாய பன்றி ஆய⋆ வென்றி வீர⋆ குன்றினால்
25 துள்ளுநீர் வரம்பு செய்த⋆ தோன்றல் ஒன்று சொல்லிடே (102)

## திருப்பாணாழ்வார் - அமலனாதி பிரான்

பரியன் ஆகி வந்த⋆ அவுணன் உடல் கீண்ட⋆ அமரர்க்-
கரிய ஆதிப் பிரான்⋆ அரங்கத்தமலன் முகத்து⋆
கரிய ஆகிப் புடை பரந்து⋆ மிளிர்ந்து செவ்வரி ஓடி⋆ நீண்ட அப்-
26 பெரிய வாய கண்கள்⋆ என்னைப் பேதைமை செய்தனவே! (8)

## பெரிய திருமொழி (1-2) - வாலிமாவலத்து

மறம் கொள் ஆள் அரி உரு என வெருவர⋆
ஒருவனதகல் மார்வம்
திறந்து⋆ வானவர் மணி முடி பணிதர⋆
இருந்த நல் இமயத்துள்⋆
இறங்கி ஏனங்கள் வளைமருப்பிடந்திடக்⋆
கிடந்தருகெரி வீசும்⋆
பிறங்கு மாமணி அருவியொடிழிதரு⋆
27 பிருதி சென்றடை நெஞ்சே (4)

## பெரிய திருமொழி (1-4) - ஏனமுனாகி

மான் முனிந்தொரு கால் வரி சிலை வளைத்த
மன்னவன்⋆ பொன் நிறத்துரவோன்⋆
ஊன் முனிந்தவன் உடல் இரு பிளவா⋆
உகிர் நுதி மடுத்து⋆ அயன் அரனைத்
தான் முனிந்திட்ட⋆ வெந் திறல் சாபம்
தவிர்த்தவன்⋆ தவம் புரிந்துயர்ந்த
மா முனி கொணர்ந்த கங்கையின் கரைமேல்⋆
28 வதரி ஆச்சிராமத்துள்ளானே (8)

www.prapatti.com

## பெரிய திருமொழி (1-5) - கலையும் கரியும்

ஏனோர் அஞ்ச வெஞ்சமத்துள்⋆
அரியாய்ப் பரிய இரணியனை⋆
ஊனார் அகலம் பிளவெடுத்த⋆
ஒருவன் தானே இரு சுடராய்⋆
வானாய் தீயாய் மாருதமாய்⋆
மலையாய் அலை நீர் உலகனைத்தும்
தானாய்⋆ தானும் ஆனான் தன்⋆
29 சாளக்கிராமம் அடை நெஞ்சே (7)

## பெரிய திருமொழி (1-7) - அங்கண் ஞாலம்

‡அங்கண் ஞாலம் அஞ்ச⋆ அங்கோர் ஆள் அரியாய்⋆ அவுணன்
பொங்க ஆகம் வள் உகிரால்⋆ போழ்ந்த புனிதன் இடம்⋆
பைங்கண் ஆனைக் கொம்பு கொண்டு⋆ பத்திமையால்⋆ அடிக்கீழ்ச்
30 செங்கண் ஆளி இட்டிறைஞ்சும்⋆ சிங்கவேள் குன்றமே (1)

அலைத்த பேழ்வாய்⋆ வாள் எயிற்றோர் கோளரியாய்⋆ அவுணன்
கொலைக் கையாளன் நெஞ்சிடந்த⋆ கூர் உகிராளன் இடம்⋆
மலைத்த செல் சாத்தெறிந்த பூசல்⋆ வன் துடிவாய் கடுப்ப⋆
31 சிலைக் கை வேடர் தெழிப்பறாத⋆ சிங்கவேள் குன்றமே (2)

ஏய்ந்த பேழ்வாய்⋆ வாள் எயிற்றோர் கோளரியாய்⋆ அவுணன்
வாய்ந்த ஆகம் வள் உகிரால்⋆ வகிர்ந்த அம்மானதிடம்⋆
ஓய்ந்த மாவும் உடைந்த குன்றும்⋆ அன்றியும் நின்றழலால்⋆
32 தேய்ந்த வேயும் அல்லதில்லாச்⋆ சிங்கவேள் குன்றமே (3)

எவ்வும் வெவ்வேல் பொன் பெயரோன்⋆ ஏதலன் இன் உயிரை
வவ்வி⋆ ஆகம் வள் உகிரால்⋆ வகிர்ந்த அம்மானதிடம்⋆
கவ்வு நாயும் கழுகும்⋆ உச்சிப்போதொடு கால் சுழன்று⋆
33 தெய்வம் அல்லால் செல்ல ஒண்ணாச்⋆ சிங்கவேள் குன்றமே (4)

மென்ற பேழ்வாய்⋆ வாள் எயிற்றோர் கோளரியாய்⋆ அவுணன்
பொன்ற ஆகம் வள் உகிரால்⋆ போழ்ந்த புனிதன் இடம்⋆

www.prapatti.com

நின்ற செந்தீ மொண்டு சூறை⋆ நீள் விசும்பூடிரிய⋆
34 சென்று காண்டற்கரிய கோயில்⋆ சிங்கவேள் குன்றமே (5)

எரிந்த பைங்கண் இலங்கு பேழ்வாய்⋆ எயிற்றொடிதெவ்வுருவென்று⋆
இரிந்து வானோர் கலங்கி ஓட⋆ இருந்த அம்மானதிடம்⋆
நெரிந்த வேயின் முழையுள் நின்று⋆ நீள் நெறிவாய் உழுவை⋆
35 திரிந்த ஆனைச் சுவடு பார்க்கும்⋆ சிங்கவேள் குன்றமே (6)

முனைத்த சீற்றம் விண் சுடப்போய்⋆ மூவுலகும் பிறவும்⋆
அனைத்தும் அஞ்ச ஆள் அரியாய்⋆ இருந்த அம்மானதிடம்⋆
கனைத்த தீயும் கல்லும் அல்லா⋆ வில்லுடை வேடருமாய்த்⋆
36 தினைத்தனையும் செல்ல ஒண்ணாச்⋆ சிங்கவேள் குன்றமே (7)

நாத்தழும்ப நான்முகனும்⋆ ஈசனுமாய் முறையால்
ஏத்த⋆ அங்கோர் ஆள் அரியாய்⋆ இருந்த அம்மானதிடம்⋆
காய்த்த வாகை நெற்றொலிப்பக்⋆ கல் அதர் வேய்ங்கழை போய்த்⋆
37 தேய்த்த தீயால் விண் சிவக்கும்⋆ சிங்கவேள் குன்றமே (8)

நல்லை நெஞ்சே! நாம் தொழுதும்⋆ நம்முடை நம் பெருமான்⋆
அல்லிமாதர் புல்க நின்ற⋆ ஆயிரந் தோளன் இடம்⋆
நெல்லி மல்கிக் கல் உடைப்பப்⋆ புல் இலை ஆர்த்து⋆ அதர்வாய்ச்
38 சில்லி சில் என்றொல்லறாத⋆ சிங்கவேள் குன்றமே (9)

‡செங்கண் ஆளி இட்டிறைஞ்சும்⋆ சிங்கவேள் குன்றுடைய⋆
எங்கள் ஈசன் எம்பிரானை⋆ இருந் தமிழ் நூற் புலவன்⋆
மங்கை யாளன் மன்னு தொல்சீர்⋆ வண்டறை தார்க் கலியன்⋆
39 செங்கையாளன் செஞ்சொல் மாலை⋆ வல்லவர் தீதிலரே (10)

## பெரிய திருமொழி (1-8) - கொங்கலர்ந்த

எண் திசைகளும் ஏழ் உலகமும்
வாங்கிப்⋆ பொன் வயிற்றில் பெய்து⋆
பண்டோர் ஆல் இலைப் பள்ளி கொண்டவன்⋆
பால் மதிக்கிடர் தீர்த்தவன்⋆
ஒண் திறல் அவுணன் உரத்துகிர்

வைத்தவன்⋆ ஒள் எயிற்றொடு⋆
திண் திறல் அரியாயவன்⋆ திரு-
40 வேங்கடம் அடை நெஞ்சமே (6)

## பெரிய திருமொழி (1-9) - தாயே தந்தை

தெரியேன் பாலகனாய்ப்⋆ பல தீமைகள் செய்துமிட்டேன்⋆
பெரியேன் ஆயின பின்⋆ பிறர்க்கே உழைத்து ஏழை ஆனேன்⋆
கரி சேர் பூம் பொழில் சூழ்⋆ கன மா மலை வேங்கடவா!⋆
41 அரியே! வந்தடைந்தேன்⋆ அடியேனை ஆட் கொண்டருளே (7)

## பெரிய திருமொழி (1-10) - கண்ணார் கடல்சூழ்

தூணாய் அதனூடு⋆ அரியாய் வந்து தோன்றி⋆
பேணா அவுணன் உடலம்⋆ பிளந்திட்டாய்!⋆
சேணார்⋆ திருவேங்கட மா மலை மேய⋆
42 கோள் நாகணையாய்!⋆ குறிக்கொள் எனை நீயே (5)

## பெரிய திருமொழி (2-3) - விற்பெருவிழவும்

‡பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன்⋆
வாயில் ஓர் ஆயிர நாமம்⋆
ஒள்ளியவாகிப் போதவாங்கதனுக்கு⋆
ஒன்றும் ஓர் பொறுப்பிலன் ஆகி⋆
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப்⋆
பிறை எயிற்றனல் விழி பேழ்வாய்⋆
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத்⋆
43 திருவல்லிக்கேணிக் கண்டேனே (8)

## பெரிய திருமொழி (2-4) - அன்றாயர்

காண்டாவனம் என்பதோர் காடு⋆ அமரர்க்-
கரையன் அது கண்டவன் நிற்க⋆ முனே

மூண்டார் அழல் உண்ண முனிந்ததுவும்⋆
அதுவன்றியும் முன் உலகம் பொறை தீர்-
த்தாண்டான்⋆ அவுணன் அவன் மார்பகலம்⋆
உகிரால் வகிர் ஆக முனிந்து⋆ அரியாய்
நீண்டான் குறள் ஆகி நிமிர்ந்தவனுக்-
44 கிடம்⋆ மா மலை ஆவது நீர் மலையே (2)

தாங்காததோர் ஆள் அரியாய்⋆ அவுணன்
தனை வீட முனிந்தவனால் அமரும்⋆
பூங்கோதையர் பொங்கெரி மூழ்க விளைத்து⋆
அதுவன்றியும் வென்றி கொள் வாள் அமரில்⋆
பாங்காக முன் ஐவரொடன்பளவிப்⋆
பதிற்றைந்திரட்டிப் படை வேந்தர் பட⋆
நீங்காச் செருவில் நிறை காத்தவனுக்-
45 கிடம்⋆ மா மலை ஆவது நீர் மலையே (4)

புகர் ஆருருவாகி முனிந்தவனைப்⋆
புகழ் வீட முனிந்துயிருண்டு⋆ அசுரன்
நகர் ஆயின பாழ் பட நாமம் எறிந்து⋆
அதுவன்றியும் வென்றி கொள் வாள் அவுணன்⋆
பகராதவன் ஆயிர நாமம்⋆ அடிப்
பணியாதவனைப் பணியால் அமரில்⋆
நிகர் ஆயவன் நெஞ்சிடந்தான் அவனுக்-
46 கிடம்⋆ மா மலை ஆவது நீர் மலையே (7)

## பெரிய திருமொழி (2-5) - பாராயது

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய்⋆
உலகுய்ய நின்றானை⋆ அன்று பேய்ச்சி
விடம் பருகு வித்தகனைக்⋆ கன்று மேய்த்து
விளையாட வல்லானை வரைமீ கானில்⋆
தடம் பருகு கரு முகிலைத் தஞ்சைக் கோயில்⋆
தவ நெறிக்கோர் பெரு நெறியை வையம் காக்கும்⋆



www.prapatti.com

கடும் பரிமேல் கற்கியை நான் கண்டு கொண்டேன்⋆
47 கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே (3)

பேணாத வலி அரக்கர் மெலிய அன்று⋆
பெருவரைத் தோள் இற நெரித்தன்றவுணர் கோனை⋆
பூண் ஆகம் பிளவெடுத்த போர் வல்லோனைப்⋆
பொரு கடலுள் துயில் அமர்ந்த புள் ஊர்தியை⋆
ஊண் ஆகப் பேய் முலை நஞ்சுண்டான் தன்னை⋆
உள்ளுவார் உள்ளத்தே உறைகின்றானை⋆
காணாது திரி தருவேன் கண்டு கொண்டேன்⋆
48 கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே (7)

பெண் ஆகி இன் அமுதம் வஞ்சித்தானைப்⋆
பிறை எயிற்றன்றடல் அரியாய்ப் பெருகினானை⋆
தண் ஆர்ந்த வார் புனல் சூழ் மெய்யம் என்னும்⋆
தட வரைமேல் கிடந்தானைப் பணங்கள் மேவி⋆
எண்ணானை எண் இறந்த புகழினானை⋆
இலங்கொளி சேர் அரவிந்தம் போன்று நீண்ட
கண்ணானைக்⋆ கண் ஆரக் கண்டு கொண்டேன்⋆
49 கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே (8)

‡பட நாகத்தணைக் கிடந்தன்றவுணர் கோனைப்⋆
பட வெகுண்டு மருதிடைப் போய்ப் பழன வேலித்⋆
தடம் ஆர்ந்த கடல் மல்லைத் தல சயனத்துத்⋆
தாமரைக்கண் துயில் அமர்ந்த தலைவர் தம்மை⋆
கடம் ஆரும் கருங்களிறு வல்லான்⋆ வெல் போர்க்
கலிகன்றி ஒலிசெய்த இன்பப் பாடல்⋆
திடம் ஆக இவை ஐந்தும் ஐந்தும் வல்லார்⋆
50 தீவினையை முதல் அரிய வல்லார் தாமே (10)

## பெரிய திருமொழி (2-7) - திவளும்

‡அன்னமும் மீனும் ஆமையும் அரியும்
ஆய⋆ எம் மாயனே! அருளாய்⋆

www.prapatti.com

என்னும் இன் தொண்டர்க்கின் அருள் புரியும்⋆
இடவெந்தை எந்தை பிரானை⋆
மன்னு மா மாட மங்கையர் தலைவன்⋆
மானவேல் கலியன் வாய் ஒலிகள்⋆
பன்னிய பனுவல் பாடுவார்⋆ நாளும்
51 பழவினை பற்றறுப்பாரே (10)

### பெரிய திருமொழி (2-8) - திரிபுரம்

‡திரிபுரம் மூன்றெரித்தானும்⋆ மற்றை
மலர்மிசை மேல் அயனும் வியப்ப⋆
முரிதிரை மா கடல் போல் முழங்கி⋆
மூவுலகும் முறையால் வணங்க⋆
எரியன கேசர வாள் எயிற்றோடு⋆
இரணியன் ஆகம் இரண்டு கூறா⋆
அரியுருவாம் இவர் ஆர் கொல் என்ன⋆
52 அட்டபுயகரத்தேன் என்றாரே (1)

### பெரிய திருமொழி (3-1) - இருந்தண்

மாறு கொண்டுடன்றெதிர்ந்த வல் அவுணன் தன்⋆
மார்பகம் இரு பிளவாக்⋆
கூறு கொண்டவன் குலமகற்கு⋆ இன் அருள்
கொடுத்தவன் இடம்⋆ மிடைந்து
சாறு கொண்ட மென் கரும்பிளங்கழை தகை⋆
விசும்புற மணி நீழல்⋆
சேறு கொண்ட தண் பழனம் அதெழில் திகழ்⋆
53 திருவயிந்திர புரமே (4)

### பெரிய திருமொழி (3-3) - வாட மருதிடை

பொங்கி அமரில் ஒருகால்⋆ பொன் பெயரோனை வெருவ⋆
அங்கவன் ஆகம் அளைந்திட்டு⋆ ஆயிரம் தோள் எழுந்தாட⋆



www.prapatti.com

பைங்கண் இரண்டெரி கான்ற⋆ நீண்ட எயிற்றொடு பேழ் வாய்ச்⋆
54 சிங்க உருவின் வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (8)

## பெரிய திருமொழி (3-4) - ஒருகுறளாய்

பஞ்சியல் மெல்லடிப் பின்னை திறத்து⋆ முன்னாள்
பாய் விடைகள் ஏழ் அடர்த்து பொன்னன் பைம் பூண்⋆
நெஞ்சிடந்து குருதியுக உகிர் வேல் ஆண்ட⋆
நின்மலன் தாள் அணைகிற்பீர்⋆ நீலமாலைத்
தஞ்சுடைய இருள் தழைப்பத் தரளம் ஆங்கே⋆
தண் மதியின் நிலாக் காட்டப் பவளம் தன்னால்⋆
செஞ்சுடர் வெயில் விரிக்கும் அழகார்⋆ காழிச்
55 சீராம விண்ணகரே சேர்மினீரே (4)

## பெரிய திருமொழி (3-9) - சலம் கொண்ட

‡சலம் கொண்ட இரணியனதகல் மார்வம் கீண்டு⋆
தடங்கடலைக் கடைந்தமுதம் கொண்டுகந்த காளை⋆
நலம் கொண்ட கரு முகில் போல் திருமேனி அம்மான்⋆
நாள்தோறும் மகிழ்ந்தினிது மருவி உறை கோயில்⋆
சலம் கொண்டு மலர் சொரியும் மல்லிகை ஒண் செருந்தி⋆
சண்பகங்கள் மண நாறும் வண் பொழிலினூடே⋆
வலங்கொண்டு கயல் ஓடி விளையாடு நாங்கூர்⋆
56 வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (1)

திண்ணியதோர் அரி உருவாய் திசை அனைத்தும் நடுங்க⋆
தேவரொடு தானவர்கள் திசைப்ப⋆ இரணியனை
நண்ணி அவன் மார்வகலத்துகிர் மடுத்த நாதன்⋆
நாள்தோறும் மகிழ்ந்தினிது மருவி உறை கோயில்⋆
எண்ணில் மிகு பெருஞ்செல்வத்தெழில் விளங்கு மறையும்⋆
ஏழ் இசையும் கேள்விகளும் இயன்ற பெருங்குணத்தோர்⋆
மண்ணில் மிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர்⋆
57 வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (2)



www.prapatti.com

## பெரிய திருமொழி (3-10) - திருமடந்தை

ஓடாதவாள் அரியின் உருவம் அது கொண்டு⋆ அன்-
றுலப்பில் மிகு பெரு வரத்த இரணியனைப் பற்றி⋆
வாடாத வள் உகிரால் பிளந்தவன் தன் மகனுக்கு⋆
அருள் செய்தான் வாழும் இடம் மல்லிகை செங்கழுநீர்⋆
சேடேறு மலர் செருந்தி செழுங்கமுகம் பாளை⋆
செண்பகங்கள் மணம் நாறும் வண் பொழிலின் ஊடே⋆
ஆடேறு வயல் ஆலைப் புகை கமழும் நாங்கூர்
58 அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (4)

## பெரிய திருமொழி (4-1) - போதலர்ந்த

ஓடாத வாளரியின்⋆ உருவாகி இரணியனை⋆
வாடாத வள் உகிரால்⋆ பிளந்தளைந்த மாலதிடம்⋆
ஏடேறு பெருஞ்செல்வத்து⋆ எழில் மறையோர் நாங்கை தன்னுள்⋆
59 சேடேறு பொழில் தழுவு⋆ திருத்தேவனார் தொகையே (7)

## பெரிய திருமொழி (4-2) - கம்பமா

உளைய ஒண் திறல் பொன் பெயரோன்⋆ தன-
துரம் பிளந்துதிரத்தை
அளையும்⋆ வெம் சினத்தரி பரி கீறிய⋆
அப்பன் வந்துறை கோயில்⋆
இளைய மங்கையர் இணையடிச் சிலம்பினோடு⋆
எழில் கொள் பந்தடிப்போர்⋆ கை
வளையின் நின்றொலி மல்கிய நாங்கூர்⋆
60 வண் புருடோத்தமமே (7)

## பெரிய திருமொழி (4-5) - தூம்புடை

கெண்டையும் குறளும் புள்ளும்⋆ கேழலும் அரியும் மாவும்⋆
அண்டமும் சுடரும்⋆ அல்லா ஆற்றலும் ஆய எந்தை⋆

ஒண் திறல் தென்னன் ஓட⋆ வடவரசோட்டம் கண்ட⋆
61 திண் திறலாளர் நாங்கூர்த்⋆ திருமணிக்கூடத்தனே (6)

## பெரிய திருமொழி (4-10) - ஆய்ச்சியர்

முடியுடை அமரர்க்கிடர் செய்யும்⋆ அசுரர்
தம் பெருமானை⋆ அன்றரியாய்
மடியிடை வைத்து மார்வைமுன் கீண்ட⋆
மாயனார் மன்னிய கோயில்⋆
படியிடை மாடத்தடியிடைத் தூணில்⋆
பதித்த பன் மணிகளின் ஒளியால்⋆
விடி பகல் இரவென்றறிவரிதாய⋆
62 திருவெள்ளியங்குடி அதுவே (8)

## பெரிய திருமொழி (5-3) - வென்றிமா

வெய்யனாய் உலகேழ் உடன் நலிந்தவன்⋆
உடலகம் இரு பிளவா⋆
கையில் நீள் உகிர்ப் படையது வாய்த்தவனே!⋆
எனக்கருள் புரியே⋆
மையின் ஆர் தரு வரால் இனம் பாய⋆
வண் தடத்திடைக் கமலங்கள்⋆
தெய்வ நாறும் ஒண் பொய்கைகள் சூழ்⋆
63 திருவெள்ளறை நின்றானே (3)

## பெரிய திருமொழி (5-4) - உந்திமேல்

ஏன மீன் ஆமையோடு⋆ அரியும் சிறு குறளுமாய்⋆
தானுமாயத்⋆ தரணித் தலைவன் இடம் என்பரால்⋆
வானும் மண்ணும் நிறையப்⋆ புகுந்தீண்டி வணங்கும்⋆ நல்
64 தேனும் பாலும் கலந்தன்னவர் சேர்⋆ தென் அரங்கமே (8)

www.prapatti.com

## பெரிய திருமொழி (5-6) - கைம்மானம்

வளர்ந்தவனைத் தடங்கடலுள்⋆ வலி உருவில் திரி சகடம்⋆
தளர்ந்துதிர உதைத்தவனைத்⋆ தரியாதன்றிரணியனைப்
பிளந்தவனை⋆ பெரு நிலம் ஈர் அடி நீட்டிப்⋆ பண்டொருநாள்
65 அளந்தவனை⋆ யான் கண்டது⋆ அணி நீர்த் தென் அரங்கத்தே (4)

## பெரிய திருமொழி (5-7) - பண்டை

எங்ஙனே உய்வர் தானவர் நினைந்தால்⋆
இரணியன் இலங்கு பூண் அகலம்⋆
பொங்கு வெங்குருதி பொன் மலை பிளந்து⋆
பொழி தரும் அருவி ஒத்திழிய⋆
வெங்கண் வாள் எயிற்றோர் வெள்ளி மா விலங்கல்⋆
விண்ணுறக் கனல் விழித்தெழுந்தது⋆
அங்ஙனேயொக்க அரியுருவானான்⋆
66 அரங்க மா நகர் அமர்ந்தானே (5)

## பெரிய திருமொழி (5-9) - கையிலங்கு

வக்கரன் வாய் முன் கீண்ட⋆
மாயநே! என்று வானோர்
புக்கு⋆ அரண் தந்தருளாய்
என்ன⋆ பொன் ஆகத்தானை⋆
நக்கரி உருவம் ஆகி⋆
நகம் கிளர்ந்திடந்துகந்த⋆
சக்கரச்செல்வன் தென் பேர்த்⋆
67 தலைவந்தாள் அடைந்துய்ந்தேனே (5)

## பெரிய திருமொழி (6-5) - கலங்க

முனையார் சீயம் ஆகி⋆ அவுணன் முரண் மார்வம்⋆
புனை வாள் உகிரால்⋆ போழ் பட ஈர்ந்த புனிதன் ஊர்⋆

சினையார் தேமாஞ்செந்தளிர் கோதிக்⋆ குயில் கூவும்⋆
68 நனையார் சோலை சூழ்ந்து⋆ அழகாய நறையூரே (2)

## பெரிய திருமொழி (6-6) - அம்பரமும்

பைங்கண் ஆள் அரியுருவாய் வெருவ நோக்கிப்⋆
பருவரைத் தோள் இரணியனைப் பற்றி வாங்கி⋆
அங்கை வாள் உகிர் நுதியால் அவனதாகம்⋆
அங்குருதி பொங்குவித்தான் அடிக்கீழ் நிற்பீர்⋆
வெங்கண் மா களிறுந்தி விண்ணியேற்ற⋆
விறல் மன்னர் திறல் அழிய வெம்மா உய்த்த⋆
செங்கணான் கோச் சோழன் சேர்ந்த கோயில்⋆
69 திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே (4)

அன்றுலக மூன்றினையும் அளந்து⋆ வேறோர்
அரியுருவாய் இரணியனதாகம் கீண்டு⋆
வென்றவனை விண்ணுலகில் செலவுய்த்தாற்கு⋆
விருந்தாவீர்! மேல் எழுந்து விலங்கல் பாய்ந்து⋆
பொன் சிதறி மணி கொணர்ந்து கரைமேல் சிந்திப்⋆
புலம் பரந்து நிலம் பரக்கும் பொன்னி நாடன்⋆
தென் தமிழன் வட புலக்கோன் சோழன் சேர்ந்த⋆
70 திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே (5)

## பெரிய திருமொழி (6-8) - மான் கொண்ட

ஓடா அரியாய்⋆ இரணியனை ஊன் இடந்த⋆
சேடார் பொழில் சூழ்⋆ திருநீர் மலையானை⋆
வாடா மலர்த்துழாய்⋆ மாலை முடியானை⋆
71 நாள்தோறும் நாடி⋆ நறையூரில் கண்டேனே (4)

## பெரிய திருமொழி (7-1) - கறவா மடநாகு

அத்தா! அரியே! என்று⋆ உன்னை அழைக்க⋆
பித்தா வென்று பேசுகின்றார்⋆ பிறர் என்னை⋆

முத்தே! மணி மாணிக்கமே!⋆ முளைக்கின்ற வித்தே⋆
72 உன்னை எங்ஙனம் நான்⋆ விடுகேனே! (8)

## பெரிய திருமொழி (7-2) - புள்ளாய் ஏனமுமாய்

ஓடா ஆளரியின்⋆ உருவாய் மருவி⋆ என்தன்
மாடே வந்து⋆ அடியேன் மனம் கொள்ள வல்ல மைந்தா⋆
பாடேன் தொண்டர் தம்மைக்⋆ கவிதைப் பனுவல் கொண்டு⋆
73 நாடேன் உன்னை அல்லால்⋆ நறையூர் நின்ற நம்பீயோ! (2)

## பெரிய திருமொழி (7-3) - சினவில்

ஆங்கு வெந்நரகத்தழுந்தும் போது⋆
அஞ்சேல் என்றடியேனை அங்கே வந்து
தாங்கு⋆ தாமரை அன்ன பொன்னார் அடி
எம்பிரானை⋆ உம்பர்க்கணியாய் நின்ற⋆
வேங்கடத்தரியைப் பரி கீறியை⋆
வெண்ணெய் உண்டுரலினிடை ஆப்புண்ட
தீங்கரும்பினை⋆ தேனை நன் பாலினை
74 அன்றி⋆ என் மனம் சிந்தை செய்யாதே (5)

என் செய்கேன் அடியேன் உரையீர்⋆ இதற்-
கென்றும் என் மனத்தே இருக்கும் புகழ்⋆
தஞ்சை ஆளியைப் பொன் பெயரோன்⋆ நெஞ்சம்
அன்றிடந்தவனைத் தழலே புரை⋆
மின் செய் வாள் அரக்கன் நகர் பாழ் பட⋆
சூழ் கடல் சிறை வைத்திமையோர் தொழும்⋆
பொன் செய்மால் வரையை மணிக் குன்றினை
75 அன்றி⋆ என் மனம் போற்றி என்னாதே (9)

## பெரிய திருமொழி (7-4) - கண்சோர

வந்திக்கும் மற்றவர்க்கும்⋆ மாசுடம்பில்
வல்லமணர் தமக்கும் அல்லேன்⋆

முந்திச் சென்றரியுருவாய்⋆ இரணியனை
    முரண் அழித்த முதல்வர்க்கல்லால்⋆
சந்தப் பூ மலர்ச் சோலை⋆ தண் சேறை
    எம்பெருமான் தாளை⋆ நாளும்
சிந்திப்பார்க்கென் உள்ளம் தேன் ஊறி⋆
76 எப்பொழுதும் தித்திக்குமே (5)

## பெரிய திருமொழி (7-6) - சிங்கமதாய்

‡சிங்கமதாய் அவுணன்⋆ திறல் ஆகம் முன் கீண்டுகந்த⋆
    சங்கம் இடத்தானைத்⋆ தழல் ஆழி வலத்தானை⋆
செங்கமலத்தயன் அனையார்⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற⋆
77 அங்கமலக் கண்ணனை⋆ அடியேன் கண்டு கொண்டேனே (1)

## பெரிய திருமொழி (7-7) - திருவுக்கும்

விண்டான் விண் புக வெஞ்சமத்தரியாய்ப்⋆
    பரியோன் மார்வகம் பற்றிப் பிளந்து⋆
பண்டான் உய்ய ஓர் மால்வரை ஏந்தும்⋆
    பண்பாளா! பரனே! பவித்திரனே⋆
கண்டேன் நான் கலியுகத்ததன் தன்மை⋆
    கருமம் ஆவதும் என் தனக்கறிந்தேன்⋆
அண்டா! நின்னடியன்றி மற்றறியேன்⋆
78 அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! (5)

## பெரிய திருமொழி (7-8) - செங்கமலம்

சினமேவும் அடலரியின் உருவமாகித்⋆
    திறல் மேவும் இரணியனதாகம் கீண்டு⋆
மனமேவு வஞ்சனையால் வந்த பேய்ச்சி
    மாள⋆ உயிர் வவ்விய எம்மாயோன் காண்மின்⋆
இனமேவு வரி வளைக்கை ஏந்தும்⋆ கோவை
    ஏய்வாய மரகதம் போல் கிளியினின் சொல்⋆

அனமேவு நடை மடவார் பயிலும் செல்வத்து*
79 அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே (5)

‡பன்றியாய் மீனாகி அரியாய்ப்* பாரைப்
படைத்துக் காத்துண்டுமிழ்ந்த பரமன் தன்னை*
அன்றமரர்க்கதிபதியும் அயனும் சேயும்
அடி பணிய* அணியழுந்தூர் நின்ற கோவை*
கன்றி நெடுவேல் வலவன் ஆலி நாடன்*
கலிகன்றி ஒலிசெய்த இன்பப் பாடல்*
ஒன்றினொடு நான்கும் ஓரைந்தும் வல்லார்*
80 ஒலி கடல் சூழ் உலகாளும் உம்பர் தாமே (10)

## பெரிய திருமொழி (8-3) - கரையெடுத்த்

மடல் எடுத்த நெடுந் தாழை* மருங்கெல்லாம் வளர் பவளம்*
திடல் எடுத்துச் சுடர் இமைக்கும்* திருக் கண்ணபுரத்துறையும்*
அடல் அடர்த்தன்றிரணியனை* முரண் அழிய அணியுகிரால்*
81 உடல் எடுத்த பெருமானுக்கு* இழந்தேன் என் ஒளி வளையே (6)

## பெரிய திருமொழி (8-4) - விண்ணவர் தங்கள்

நீர் மலிகின்றதோர்* மீனாய் ஓர் ஆமையுமாய்*
சீர் மலிகின்றதோர்* சிங்க உருவாகி*
கார் மலி வண்ணன்* கண்ணபுரத்தெம் பெருமான்*
82 தார் மலி தண் துழாய்* தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! (4)

## பெரிய திருமொழி (8-6) - தொண்டீர்

ஆமையாகி அரியாகி*
அன்னம் ஆகி* அந்தணர் தம்
ஓமமாகி ஊழியாகி*
உலகு சூழ்ந்த நெடும் புணரி*
சேம மதிள் சூழ் இலங்கைக்கோன்*



www.prapatti.com

சிரமும் கரமும் துணித்து⋆ முன்
காமற் பயந்தான் கருதுமூர்⋆
83 கண்ணபுரம் நாம் தொழுதுமே (5)

## பெரிய திருமொழி (8-8) - வானோர் அளவும்

உளைந்த அரியும் மானிடமும்⋆
உடனாய்த் தோன்ற ஒன்றுவித்து⋆
விளைந்த சீற்றம் விண் வெதும்ப⋆
வேற்றோன் அகலம் வெஞ்சமத்து⋆
பிளந்து வளைந்த உகிரானைப்⋆
பெருந் தண் செந்நெல் குலை தடிந்து⋆
களஞ்செய் புறவிற் கண்ணபுரத்து⋆
84 அடியேன் கண்டு கொண்டேனே (4)

‡மீனோடாமை கேழல் அரி
குறளாய்⋆ முன்னும் இராமனாய்த்
தானாய்⋆ பின்னும் இராமனாய்த்
தாமோதரனாய்க்⋆ கற்கியும்
ஆனான் தன்னை⋆ கண்ணபுரத்
தடியன்⋆ கலியன் ஒலிசெய்த⋆
தேனார் இன் சொல் தமிழ் மாலை⋆
85 செப்பப் பாவம் நில்லாவே (10)

## பெரிய திருமொழி (8-9) - கைம்மானம்

‡மிக்கானை⋆ மறையாய் விரிந்த விளக்கை⋆ என்னுள்
புக்கானைப்⋆ புகழ் சேர் பொலிகின்ற பொன்மலையை⋆
தக்கானைக்⋆ கடிகைத் தடங்குன்றின்மிசை இருந்த⋆
86 அக்காரக் கனியை⋆ அடைந்துய்ந்து போனேனே (4)

www.prapatti.com

## பெரிய திருமொழி (8-10) - வண்டார்

மாணாகி⋆ வையம் அளந்ததுவும்⋆ வாள் அவுணன்
பூண் ஆகம் கீண்டதுவும்⋆ ஈண்டு நினைந்திருந்தேன்⋆
பேணாத வல்வினையேன்⋆ இடர் எத்தனையும்
87 காணேன் நான்⋆ கண்ணபுரத்துறை அம்மானே! (8)

## பெரிய திருமொழி (9-4) - காவார்

பரிய இரணியனதாகம்⋆ அணியுகிரால்⋆
அரியுருவாய்க் கீண்டான்⋆ அருள் தந்தவா! நமக்கு⋆
பொரு திரைகள் போந்துலவு⋆ புல்லாணி கை தொழுதேன்⋆
88 அரிமலர்க் கண் நீர் ததும்ப⋆ அந்துகிலும் நில்லாவே (4)

## பெரிய திருமொழி (9-9) - மூவரில்

சிங்கமதாய் அவுணன்⋆ திறல் ஆகம் முன் கீண்டுகந்த⋆
பங்கய மாமலர்க் கண்⋆ பரனை எம் பரஞ்சுடரை⋆
திங்கள் நன் மாமுகில் சேர்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
89 நங்கள் பிரானை⋆ இன்று நணுகுங்கொல் என்நன்னுதலே (4)

## பெரிய திருமொழி (10-1) - ஒருநல் சுற்றம்

துளக்கமில் சுடரை⋆ அவுணன் உடல்
பிளக்கும் மைந்தனைப்⋆ பேரில் வணங்கிப் போய்⋆
அளப்பில் ஆரமுதை⋆ அமரர்க்கருள்
90 விளக்கினை⋆ சென்று⋆ வெள்ளறைக் காண்டுமே (4)

## பெரிய திருமொழி (10-6) - எங்கானும்

உளைந்திட்டெழுந்த மது கைடவர்கள்⋆
உலப்பில் வலியார் அவர் பால்⋆ வயிரம்
விளைந்திட்டதென்றெண்ணி விண்ணோர் பரவ⋆

அவர் நாள் ஒழித்த பெருமான் முன நாள்⋆
வளைந்திட்ட வில்லாளி வல் வாள் எயிற்று⋆
மலை போல் அவுணன் உடல் வள்ளுகிரால்⋆
அளைந்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
91 அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே (3)

தளர்ந்திட்டிமையோர் சரண் தாவெனத்⋆ தான்
சரணாய் முரண் ஆயவனை⋆ உகிரால்
பிளந்திட்டமரர்க்கருள் செய்துகந்த⋆
பெருமான் திருமால் விரி நீர் உலகை⋆
வளர்ந்திட்ட தொல் சீர் விறல் மாவலியை⋆
மண் கொள்ள வஞ்சித்தொரு மாண் குறளாய்⋆
அளந்திட்டவன் காண்மின் இன்றாய்ச்சியரால்⋆
92 அளை வெண்ணெய் உண்டாப்புண்டிருந்தவனே (4)

## பெரிய திருமொழி (10-9) - புள்ளுருவாகி

பொருந்தலன் ஆகம் புள்ளுவந்தேற⋆
வள்ளுகிரால் பிளந்து⋆ அன்று
பெருந் தகைக்கிரங்கி வாலியை முனிந்த⋆
பெருமைகொலோ செய்ததின்று⋆
பெருந் தடங்கண்ணி சுரும்புறு கோதை⋆
பெருமையை நினைந்திலை பேசில்⋆
கருங்கடல் வண்ணா! கவுள் கொண்ட நீராம்⋆
93 இவள் எனக் கருதுகின்றாயே (8)

## பெரிய திருமொழி (11-1) - குன்றமொன்றெடுத்து

அங்கோர் ஆள் அரியாய்⋆ அவுணனை⋆
பங்கமா⋆ இரு கூறு செய்தவன்⋆
மங்குல் மா மதி⋆ வாங்கவே கொலோ⋆
94 பொங்கு மா கடல்⋆ புலம்புகின்றதே (5)

## பெரிய திருமொழி (11-4) - நிலையிடம்

தளையவிழ் கோதை மாலை இருபால் தயங்க⋆
எரி கான்றிரண்டு தறு கண்⋆
அளவெழ வெம்மை மிக்க அரியாகி⋆ அன்று
பரியோன் சினங்கள் அவிழ⋆
வளை உகிர் ஆளி மொய்ம்பில் மறவோனதாகம்⋆
மதியாது சென்றொர் உகிரால்⋆
பிளவெழ விட்ட குட்டம் அதுவைய மூடு⋆
95 பெரு நீரின் மும்மை பெரிதே (4)

## பெரிய திருமொழி (11-7) - நீள் நாகம்

கூடா இரணியனைக்⋆ கூருகிரால் மார்விடந்த⋆
ஓடா அடல் அரியை⋆ உம்பரார் கோமனை⋆
தோடார் நறுந் துழாய்⋆ மார்வனை ஆர்வத்தால்⋆
96 பாடாதார் பாட்டென்றும்⋆ பாட்டல்ல கேட்டாமே (4)

## திருமங்கையாழ்வார் - திருக்குறுந்தாண்டகம்

காற்றினைப் புனலைத் தீயைக்⋆ கடி மதிள் இலங்கை செற்ற
ஏற்றினை⋆ இமயம் மேய⋆ எழில் மணித் திரளை⋆ இன்ப
ஆற்றினை அமுதந் தன்னை⋆ அவுணன் ஆர் உயிரை உண்ட
97 கூற்றினை⋆ குணங்கொண்டுள்ளம்⋆ கூறு நீ கூறுமாறே (2)

## திருவாய்மொழி (2-1) - ஆடியாடி

‡ஆடியாடி⋆ அகம் கரைந்து⋆ இசை
பாடிப் பாடிக்⋆ கண்ணீர் மல்கி⋆ எங்கும்
நாடி நாடி⋆ நரசிங்கா! என்று⋆
98 வாடி வாடும்⋆ இவ்வாணுதலே (1)

www.prapatti.com

## திருவாய்மொழி (2-6) - வைகுந்தா

உன்னைச் சிந்தை செய்து செய்து⋆ உன்
நெடு மா மொழி இசை பாடி ஆடி⋆ என்
முன்னைத் தீவினைகள்⋆
முழு வேர் அரிந்தனன் யான்⋆
உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த⋆
இரணியன் அகல் மார்வம் கீண்ட⋆ என்
முன்னைக் கோளரியே⋆
99 முடியாததென் எனக்கே (6)

## திருவாய்மொழி (2-8) - அணைவது

எங்கும் உளன் கண்ணன் என்ற⋆ மகனைக் காய்ந்து⋆
இங்கில்லையால் என்று⋆ இரணியன் தூண் புடைப்ப⋆
அங்கப்பொழுதே⋆ அவன் வீயத் தோன்றிய⋆ என்
100 சிங்கப் பிரான் பெருமை⋆ ஆராயும் சீர்மைத்தே (9)

## திருவாய்மொழி (3-6) - செய்யதாமரை

தோற்றக் கேடவை இல்லவன் உடையான்⋆
அவன் ஒரு மூர்த்தியாய்⋆
சீற்றத்தோடருள் பெற்றவன் அடிக்
கீழ்ப்⋆ புக நின்ற செங்கண்மால்⋆
நாற்றத் தோற்றச் சுவை ஒலி⋆ உறல்
ஆகி நின்ற⋆ எம் வானவர்
ஏற்றையே அன்றி⋆ மற்றொருவரை
101 யான் இலேன் எழுமைக்குமே (6)

## திருவாய்மொழி (4-8) - ஏறாளும்

கிளர் ஒளியால் குறைவில்லா⋆ அரியுருவாய்க் கிளர்ந்தெழுந்து⋆
கிளர் ஒளிய இரணியனது⋆ அகல் மார்பம் கிழித்துகந்த⋆



www.prapatti.com

வளர் ஒளிய கனல் ஆழி⋆ வலம்புரியன் மணி நீல⋆
102 வளர் ஒளியான் கவராத⋆ வரி வளையால் குறைவிலமே (7)

## திருவாய்மொழி (5-1) - கையார்

ஆனான் ஆளுடையான் என்று⋆ அஃதே கொண்டுகந்து வந்து⋆
தானே இன்னருள் செய்து⋆ என்னை முற்றவும் தான் ஆனான்⋆
மீனாய் ஆமையுமாய்⋆ நரசிங்கமுமாய்க் குறளாய்⋆
103 கானார் ஏனமுமாய்க்⋆ கற்கியாம் இன்னம் கார் வண்ணனே (10)

## திருவாய்மொழி (5-8) - ஆராவமுதே

சூழ் கண்டாய் என் தொல்லை வினையை
அறுத்து⋆ உன் அடிசேரும்
ஊழ் கண்டிருந்தே⋆ தூராக்குழி தூர்த்து⋆
எனை நாள் அகன்றிருப்பன்⋆
வாழ் தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய்!⋆
வானோர் கோமானே⋆
யாழின் இசையே! அமுதே!⋆ அறிவின்
104 பயனே! அரியேறே! (6)

அரியேறே! என்னம் பொற்சுடரே!⋆ செங்கண் கரு முகிலே!⋆
எரியே! பவளக் குன்றே!⋆ நால் தோள் எந்தாய்! உனதருளே⋆
பிரியா அடிமை என்னைக் கொண்டாய்⋆ குடந்தைத் திருமாலே⋆
105 தரியேன் இனி உன் சரணம் தந்து⋆ என் சன்மம் களையாயே (7)

## திருவாய்மொழி (7-2) - கங்குலும் பகலும்

என் செய்கின்றாய் என் தாமரைக் கண்ணா!
என்னும்⋆ கண்ணீர் மல்க இருக்கும்⋆
என் செய்கேன் எறி நீர்த் திருவரங்கத்தாய்
என்னும்⋆ வெவ்வுயிர்த்துயிர்த்துருகும்⋆
முன் செய்த வினையே! முகப்படாய் என்னும்⋆

முகில்வண்ணா! தகுவதோ என்னும்⋆
முன் செய்திவ்வுலகம் உண்டுமிழ்ந்தளந்தாய்!⋆
106 எங்கொலோ முடிகின்றதிவட்கே (2)

வட்கிலள் இறையும் மணிவண்ணா! என்னும்⋆
வானமே நோக்கும் மையாக்கும்⋆
உட்குடை அசுரர் உயிர் எல்லாம் உண்ட⋆
ஒருவனே! என்னும் உள்ளுருகும்⋆
கட்கிலீ! உன்னைக் காணுமாறருளாய்⋆
காகுத்தா! கண்ணனே! என்னும்⋆
திட்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய்!⋆
107 இவள்திறத்தென் செய்திட்டாயே (3)

சிந்திக்கும் திசைக்கும் தேறும் கை கூப்பும்⋆
திருவரங்கத்துள்ளாய்! என்னும்
வந்திக்கும்⋆ ஆங்கே மழைக்கண்ணீர் மல்க⋆
வந்திடாய் என்றென்றே மயங்கும்⋆
அந்திப்போதவுணன் உடல் இடந்தானே!⋆
அலை கடல் கடைந்த ஆரமுதே⋆
சந்தித்துன் சரணம் சார்வதே வலித்த⋆
108 தையலை மையல் செய்தானே! (5)

## திருவாய்மொழி (7-4) - ஆழியெழ

போழ்து மெலிந்த⋆ புன் செக்கரில்⋆ வான் திசை
சூழும் எழுந்து⋆ உதிரப் புனலா⋆ மலை
கீழ்து பிளந்த⋆ சிங்கம் ஒத்ததால்⋆ அப்பன்
109 ஆழ் துயர் செய்து⋆ அசுரரைக் கொல்லுமாறே (6)

## திருவாய்மொழி (7-5) - கற்பார்

செல்ல உணர்ந்தவர்⋆ செல்வன் தன் சீர் அன்றிக் கற்பரோ⋆
எல்லையிலாத பெரும் தவத்தால்⋆ பல செய்ம்மிறை⋆



www.prapatti.com

அல்லல் அமரரைச் செய்யும்⋆ இரணியன் ஆகத்தை⋆
110 மல்லல் அரியுருவாய்ச்⋆ செய்த மாயம் அறிந்துமே (8)

## திருவாய்மொழி (7-6) - பாமருமூவுலகும்

‡புக்க அரியுருவாய்⋆ அவுணன் உடல் கீண்டுகந்த⋆
சக்கரச் செல்வன் தன்னைக்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
மிக்க ஓர் ஆயிரத்துள்⋆ இவை பத்தும் வல்லார் அவரை⋆
111 தொக்குப் பல்லாண்டிசைத்துக்⋆ கவரி செய்வர் ஏழையரே (11)

## திருவாய்மொழி (7-8) - மாயா! வாமனனே!

‡ஆம் வண்ணம் இன்னதொன்றென்று⋆
அறிவதரிய அரியை⋆
ஆம் வண்ணத்தால்⋆ குருகூர்ச்
சடகோபன் அறிந்துரைத்த⋆
ஆம் வண்ண ஒண் தமிழ்கள்⋆
இவை ஆயிரத்துள் இப்பத்தும்⋆
ஆம் வண்ணத்தால் உரைப்பார்⋆
112 அமைந்தார் தமக்கென்றைக்குமே (11)

## திருவாய்மொழி (7-10) - இன்பம் பயக்க

கூடுங்கொல் வைகலும்⋆ கோவிந்தனை
மதுசூதனைக் கோளரியை⋆
ஆடும் பறவை மிசைக் கண்டு⋆
கை தொழுதன்றி அவன் உறையும்⋆
பாடும் பெரும் புகழ் நான்மறை வேள்வியைந்து⋆
ஆறங்கம் பன்னினர் வாழ்⋆
நீடு பொழில் திருவாறன் விளை தொழ⋆
113 வாய்க்குங்கொல் நிச்சலுமே (3)

www.prapatti.com

## திருவாய்மொழி (8-1) - தேவிமாராவார்

எடுத்த பேராளன் நந்தகோபன் தன்⋆
இன்னுயிர்ச் சிறுவனே⋆ அசோதைக்-
கடுத்த பேரின்பக் குல விளங்களிறே⋆
அடியனேன் பெரிய அம்மானே⋆
கடுத்த போர் அவுணன் உடல் இரு பிளவாக்⋆
கையுகிர் ஆண்ட எங்கடலே⋆
அடுத்ததோர் உருவாய் இன்று நீ வாராய்⋆
114 எங்ஙனம் தேறுவர் உமரே (3)

## திருவாய்மொழி (8-2) - நங்கள் வரிவளை

மால் அரி கேசவன் நாரணன்⋆ சீமாதவன்
கோவிந்தன் வைகுந்தன் என்றென்று⋆
ஓலமிட என்னைப் பண்ணி விட்டிட்டு⋆
ஒன்றும் உருவும் சுவடும் காட்டான்⋆
ஏல மலர் குழல் அன்னைமீர்காள்!⋆
என்னுடைத் தோழியர்காள்! என் செய்கேன்⋆
காலம் பல சென்றும் காண்பதாணை⋆
115 உங்களோடெங்கள் இடையில்லையே (7)

## திருவாய்மொழி (8-6) - எல்லியும்

அற்புதன் நாராயணன்⋆ அரி வாமனன்⋆
நிற்பது மேவி⋆ இருப்பதென் நெஞ்சகம்⋆
நல் புகழ் வேதியர்⋆ நான்மறை நின்றதிர்⋆
116 கற்பகச் சோலைத்⋆ திருக்கடித்தானமே (10)

## திருவாய்மொழி (9-3) - ஓராயிரமாய்

அறிந்தன வேத⋆ அரும் பொருள் நூல்கள்⋆
அறிந்தன கொள்க⋆ அரும் பொருள் ஆதல்⋆



www.prapatti.com

அறிந்தனர் எல்லாம்⋆ அரியை வணங்கி⋆
117 அறிந்தனர்⋆ நோய்கள் அறுக்கும் மருந்தே (3)

ஆகம் சேர்⋆ நரசிங்கம் அதாகி⋆ ஓர்
ஆகம் வள்ளுகிரால்⋆ பிளந்தான் உறை⋆
மாக வைகுந்தம்⋆ காண்பதற்கு⋆ என் மனம்
118 ஏகம் எண்ணும்⋆ இராப்பகல் இன்றியே (7)

## திருவாய்மொழி (9-4) - மையார்

உறுவதிதுவென்று⋆ உனக்காள் பட்டு⋆ நின் கண்
பெறுவதெதுகொல் என்று⋆ பேதையேன் நெஞ்சம்⋆
மறுகல் செய்யும்⋆ வானவர் தானவர்க்கென்றும்⋆
119 அறிவதரிய⋆ அரியாய அம்மானே! (4)

அரியாய அம்மானை⋆ அமரர் பிரானை⋆
பெரியானைப்⋆ பிரமனை முன் படைத்தானை⋆
வரி வாள் அரவினணைப்⋆ பள்ளி கொள்கின்ற⋆
120 கரியான் கழல் காணக்⋆ கருதும் கருத்தே (5)

உகந்தே உன்னை⋆ உள்ளும் என்னுள்ளத்து⋆ அகம்பால்
அகந்தான் அமர்ந்தே⋆ இடம் கொண்ட அமலா⋆
மிகுந்தானவன் மார்வகலம்⋆ இரு கூறா
121 நகந்தாய்⋆ நரசிங்கம் அதாய உருவே! (7)

## திருவாய்மொழி (9-9) - மல்லிகை கமழ்

‡ மல்லிகை கமழ் தென்றல் ஈரும் ஆலோ!⋆
வண் குறிஞ்சி இசை தவழும் ஆலோ!⋆
செல் கதிர் மாலையும் மயக்கும் ஆலோ!⋆
செக்கர் நன்மேகங்கள் சிதைக்கும் ஆலோ!⋆
அல்லியந் தாமரைக் கண்ணன் எம்மான்!⋆
ஆயர்கள் ஏறறியேறெம் மாயோன்⋆

புல்லிய முலைகளும் தோளும் கொண்டு⋆
122 புகலிடம் அறிகிலம் தமியம் ஆலோ! (1)

## திருவாய்மொழி (9-10) - மாலை நண்ணி

அன்பன் ஆகும்⋆ தன தாள் அடைந்தார்க்கெல்லாம்⋆
செம் பொனாகத்து⋆ அவுணன் உடல் கீண்டவன்⋆
நன் பொனேய்ந்த மதிள் சூழ்⋆ திருக்கண்ண புரத்-
123 தன்பன்⋆ நாளும் தன⋆ மெய்யர்க்கு மெய்யனே (6)

## திருவாய்மொழி (10-6) - அருள் பெறுவார்

என் நெஞ்சத்துள் இருந்து⋆ இங்கிரும் தமிழ் நூல் இவை மொழிந்து⋆
வன்னெஞ்சத் திரணியனை⋆ மார்விடந்த வாட்டாற்றான்⋆
மன்னஞ்சப் பாரதத்துப்⋆ பாண்டவர்க்காப் படை தொட்டான்⋆
124 நல் நெஞ்சே! நம் பெருமான்⋆ நமக்கருள் தான் செய்வானே (4)

பிரியாதாட் செய்யென்று⋆
பிறப்பறுத்தாள் அறக் கொண்டான்⋆
அரியாகி இரணியனை⋆
ஆகம் கீண்டான் அன்று⋆
பெரியார்க்காட் பட்டக்கால்⋆
பெறாத பயன் பெறுமாறு⋆
வரி வாள் வாய் அரவணைமேல்⋆
125 வாட்டாற்றான் காட்டினனே (10)

## பொய்கையாழ்வார் - முதல் திருவந்தாதி

அடியும் படி கடப்பத்⋆ தோள் திசை மேல் செல்ல⋆
முடியும் விசும்பளந்ததென்பர்⋆ வடி உகிரால்
ஈர்ந்தான்⋆ இரணியனதாகம்⋆ இருஞ்சிறைப் புள்
126 ஊர்ந்தான்⋆ உலகளந்த நான்று (17)



www.prapatti.com

தழும்பிருந்த சார்ங்க நாண்⋆ தோய்ந்தவாமங்கை⋆
    தழும்பிருந்த தாள் சகடம் சாடி⋆ தழும்பிருந்த
பூங்கோதையாள் வெருவப்⋆ பொன் பெயரோன் மார்பிடந்த⋆
127 வீங்கோத வண்ணர் விரல் (23)

புரி ஒரு கை பற்றி⋆ ஓர் பொன் ஆழி ஏந்தி⋆
    அரி உருவும் ஆள் உருவும் ஆகி⋆ எரி உருவ
வண்ணத்தான் மார்பிடந்த⋆ மால் அடியை அல்லால்⋆ மற்று
128 எண்ணத்தான் ஆமோ இமை (31)

முரணை வலி⋆ தொலைதற்காம் அன்றே⋆ முன்னம்
    தரணி தனதாகத்தானே⋆ இரணியனைப்
புண் நிரந்த வள் உகிரால்⋆ பொன் ஆழிக் கையால்⋆ நீ
129 மண் இரந்து கொண்ட வகை (36)

எளிதில் இரண்டடியும்⋆ காண்பதற்கு⋆ என் உள்ளம்
    தெளியத் தெளிந்தொழியும் செவ்வே⋆ களியில்
பொருந்தாதவனைப்⋆ பொரல் உற்று⋆ அரியாய்
130 இருந்தான் திருநாமம் எண் (51)

ஏற்றான் புள் ஊர்ந்தான்⋆ எயில் எரித்தான் மார்விடந்தான்⋆
    நீற்றான் நிழல் மணி வண்ணத்தான்⋆ கூற்றொருபால்
மங்கையான்⋆ பூமகளான் வார் சடையான்⋆ நீள் முடியான்
131 கங்கையான்⋆ நீள் கழலான் காப்பு (74)

வரத்தால் வலி நினைந்து⋆ மாதவ! நின் பாதம்⋆
    சிரத்தால் வணங்கானாம் என்றே⋆ உரத்தினால்
ஈர் அரியாய்⋆ நேர் வலியோன் ஆய இரணியனை⋆
132 ஓர் அரியாய் நீ இடந்தது‌ஊன் (90)

வயிறழல வாள் உருவி⋆ வந்தானை அஞ்ச⋆
    எயிறிலக வாய் மடித்ததென் நீ⋆ பொறி உகிரால்
பூ வடியை ஈடழித்த⋆ பொன் ஆழிக் கையா⋆ நின்
133 சேவடி மேல் ஈடழியச் செற்று (93)

www.prapatti.com

## பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி

கொண்டதுலகம்⋆ குறள் உருவாய்க் கோளரியாய்⋆
ஒண் திறலோன் மார்வத்துகிர் வைத்தது⋆ உண்டதுவும்
தான் கடந்த ஏழ் உலகே⋆ தாமரைக் கண் மால் ஒருநாள்⋆
134 வான் கடந்தான் செய்த வழக்கு (18)

மாலை அரி உருவன்⋆ பாதமலர் அணிந்து⋆
காலை தொழுதெழுமின் கைகோலி⋆ ஞாலம்
அளந்திடந்துண்டுமிழ்ந்த⋆ அண்ணலை மற்றல்லால்⋆
135 உளம் கிடந்த ஆற்றால் உணர்ந்து (47)

வரம் கருதித் தன்னை⋆ வணங்காத வன்மை⋆
உரம் கருதி மூர்க்கத்தவனை⋆ நரம் கலந்த
சிங்கமாய்க் கீண்ட⋆ திருவன் அடி இணையே⋆
136 அங்கண் மா ஞாலத்தமுது (84)

உற்று வணங்கித் தொழுமின்⋆ உலகேழும்⋆
முற்றும் விழுங்கும் முகில் வண்ணம்⋆ பற்றிப்
பொருந்தாதான் மார்பிடந்து⋆ பூம் பாடகத்துள்
137 இருந்தானை⋆ ஏத்தும் என் நெஞ்சு (94)

என் நெஞ்சம் மேயான்⋆ என் சென்னியான்⋆ தான் அவனை
வன்னெஞ்சம் கீண்ட மணி வண்ணன்⋆ முன்னம் சேய்
ஊழியான்⋆ ஊழி பெயர்த்தான்⋆ உலகேத்தும்
138 ஆழியான் அத்தியூரான் (95)

## பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி

இவை அவன் கோயில்⋆ இரணியனதாகம்⋆
அவை செய்தரி உருவம் ஆனான்⋆ செவி தெரியா
நாகத்தான்⋆ நால் வேதத்துள்ளான்⋆ நறவேற்றான்
139 பாகத்தான் பாற்கடல் உளான் (31)

கோவலனாய்⋆ ஆ நிரைகள் மேய்த்துக் குழல் ஊதி⋆
மா வலனாய்க் கீண்ட மணி வண்ணன்⋆ மேவி

அரி உருவம் ஆகி⋆ இரணியனதாகம்⋆
140 தெரி உகிரால் கீண்டான் சினம் (42)

அங்கற்கிடர் இன்றி⋆ அந்திப் பொழுதத்து⋆
மங்க இரணியனதாகத்தை⋆ பொங்கி
அரி உருவமாய்ப் பிளந்த⋆ அம்மான் அவனே⋆
141 கரி உருவம் கொம்பொசித்தான் காய்ந்து (65)

புகுந்திலங்கும்⋆ அந்திப் பொழுதத்து⋆ அரியாய்
இகழ்ந்த இரணியனதாகம்⋆ சுகிர்ந்தெங்கும்
சிந்தப் பிளந்த⋆ திருமால் திருவடியே⋆
142 வந்தித்தென் நெஞ்சமே! வாழ்த்து (95)

திருமழிசையாழ்வார் - நான்முகன் திருவந்தாதி

தொகுத்த வரத்தனாய்த்⋆ தோலா தான் மார்வம்⋆
வகிர்த்த வளை உகிர் தோள் மாலே⋆ உகத்தில்
ஒருநான்று நீ உயர்த்தி⋆ உள்வாங்கி நீயே⋆
143 அரு நான்கும் ஆனாய் அறி (5)

மாறாய தானவனை⋆ வள் உகிரால்⋆ மார்விரண்டு
கூறாகக்⋆ கீறிய கோளரியை⋆ வேறாக
ஏத்தியிருப்பாரை⋆ வெல்லுமே⋆ மற்றவரை
144 சார்த்தி இருப்பார் தவம் (18)

இவையா! பில வாய்⋆ திறந்தெரி கான்ற⋆
இவையா! எரிவட்டக் கண்கள்⋆ இவையா
எரி பொங்கிக் காட்டும்⋆ இமையோர் பெருமான்⋆
145 அரி பொங்கிக் காட்டும் அழகு (21)

அழகியான் தானே⋆ அரி உருவன் தானே⋆
பழகியான் தாளே பணிமின்⋆ குழவியாய்த்
தான் ஏழ் உலகுக்கும்⋆ தன்மைக்கும் தன்மையனே⋆
146 மீனாய் உயிர் அளிக்கும் வித்து (22)

www.prapatti.com

நம்மாழ்வார் - திருவிருத்தம்

மட நெஞ்சம் என்றும் தமதென்றும்⋆
ஓர் கருமம் கருதி
விட நெஞ்சை உற்றார்⋆ விடவோ
அமையும்⋆ அப் பொன் பெயரோன்
தட நெஞ்சம் கீண்ட பிரானார்
தமதடிக் கீழ் விடப் போய்த்⋆
திட நெஞ்சமாய்⋆ எம்மை நீத்தின்று
147 தாறும் திரிகின்றதே (46)

நம்மாழ்வார் - பெரிய திருவந்தாதி

நின்றும் இருந்தும்⋆ கிடந்தும் திரிதந்தும்⋆
ஒன்றுமோ ஆற்றான் என் நெஞ்சகலான்⋆ அன்றங்கை
வன் புடையால் பொன் பெயரோன்⋆ வாய் தகர்த்து மார் விடந்தான்⋆
148 அன்புடையன் அன்றே அவன் (35)

வழித் தங்கு வல்வினையை⋆ மாற்றானோ நெஞ்சே⋆
தழீ இக்கொண்டு போர் அவுணன் தன்னை⋆ சுழித்தெங்கும்
தாழ்விடங்கள் பற்றிப்⋆ புலால் வெள்ளம் தான் உகள⋆
149 வாழ்வடங்க மார்விடந்த மால் (57)

திருமங்கையாழ்வார் - சிறிய திருமடல்

ஈரைந்து
சீரார் சிரம் அறுத்துச் செற்றுகந்த செங்கண் மால்⋆
போரார் நெடு வேலோன் பொன் பெயரோன் ஆகத்தை⋆
150 கூரார்ந்த வள் உகிரால் கீண்டு (19)

குடல் மாலை
சீரார் திருமார்பின் மேல் கட்டி⋆ செங்குருதி
சோராக் கிடந்தானைக் குங்குமத் தோள் கொட்டி⋆
151 ஆரா எழுந்தான் அரி உருவாய் (20)

## திருமங்கையாழ்வார் - பெரிய திருமடல்

காயாவின்

சின்ன நறும் பூந்திகழ் வண்ணன்⋆ வண்ணம் போல்
அன்ன கடலை மலையிட்டணைகட்டி⋆
மன்னன் இராவணனை மாமண்டு வெஞ்சமத்து⋆
பொன் முடிகள் பத்தும் புரளச் சரந்துரந்து⋆
152 தென்னுலகம் ஏற்றுவித்த சேவகனை (54)

ஆயிரக்கண்

மன்னவன் வானமும் வானவர் தம் பொன்னுலகும்⋆
தன்னுடைய தோள் வலியால் கைக்கொண்ட தானவனை⋆
பின்னோர் அரியுருவமாகி எரிவிழித்து⋆
153 கொல் நவிலும் வெஞ்சமத்துக் கொல்லாதே (55)

வல்லாளன்

மன்னு மணிக்குஞ்சி பற்றி வர வீர்த்து⋆
154 தன்னுடைய தாள்மேல் கிடாத்தி (56)

வானவர் தம்

சென்னி மணிச் சுடரைத் தண்கால் திறல் வலியை⋆
தன்னைப் பிறரறியாத் தத்துவத்தை முத்தினை⋆
அன்னத்தை மீனை அரியை அருமறையை⋆
155 முன்னிவ்வுலகுண்ட மூர்த்தியை (65)

மின்னி மழை தவழும் வேங்கடத்தெம் வித்தகனை⋆
மன்னனை மாலிருஞ்சோலை மணாளனை⋆
156 கொல் நவிலும் ஆழிப் படையானை (68)

கோட்டியூர்

அன்னவுருவின் அரியை⋆ திருமெய்யத்-
தின்னமுத வெள்ளத்தை இந்தளூர் அந்தணனை⋆
மன்னு மதிட்கச்சி வேளுக்கை ஆளரியை⋆
157 மன்னிய பாடகத்தெம் மைந்தனை (69)

www.prapatti.com

திருவரங்கத்தமுதனார் - இராமாநுச நூற்றந்தாதி

வளர்ந்த வெங்கோப மடங்கல் ஒன்றாய்⋆ அன்று வாள் அவுணன்
கிளர்ந்த⋆ பொன் ஆகம் கிழித்தவன்⋆ கீர்த்திப் பயிர் எழுந்து
விளைந்திடும் சிந்தை இராமானுசன் என்தன் மெய்வினை நோய்⋆
158 களைந்து நன் ஞானம் அளித்தனன்⋆ கையில் கனி என்னவே (103)

தேசிக பிரபந்தம் - மும்மணிக்கோவை

மழையில் எழுந்த மொக்குள் போல் வையம்⋆
அழிய ஒன்றழியா அடியவர் மெய்ய⋆
அரு மறையின் பொருள் ஆய்ந்தெடுக்குங்கால்⋆
திருவுடன் அமர்ந்த தெய்வநாயக⋆
நின் திருத் தனக்கு நீ திருவாகி⋆
இந்து தன் நிலவுடன் இலங்கு தன்மையினை⋆
நந்துதல் இல்லா நல் விளக்காகி⋆
அந்தம் இல் அமுத ஆழியாய் நிற்றி⋆
பாற்கடல் தன்னில் பன்மணி அன்ன⋆
சீர்க் கணம் சேர்ந்த சீலம் எல்லை இலை⋆
அடியவர் பிழைகள் நின் கருத்தடையாது⋆
அடைய ஆண்டருளும் அரசனும் நீயே⋆
உயர்ந்த நீ உன்னை எம்முடன் கலந்தனை⋆
அயிந்தை மா நகரில் அமர்ந்தனை எமக்காய்ச்⋆
சித்திர மணி எனத் திகழு மன் உருவில்⋆
அத்திரம் அணி என அனைத்தும் நீ அணுகி⋆
விண்ணுள் அமர்ந்த வியன் உருவதனால்⋆
எண்ணிய ஈர் இரண்டுருக்களும் அடைதி⋆
பன்னிரு நாமம் பல பல உருவாய்⋆
இன் உரு எங்கும் எய்தி நீ நிற்றி⋆
மீனோடாமை கேழல் கோளரியாய்⋆
வானார் குறளாய் மழுப்படை முனியாய்ப்⋆
பின்னும் இராமர் இருவராய்ப் பாரில்⋆
துன்னிய பரம் தீர் துவரை மன்னனுமாய்க்⋆

கலி தவிர்த்தருளும் கற்கியாய் மற்றும்⋆
மலிவதற்கெண்ணும் வல்வினை மாற்ற⋆
நானா உருவம் கொண்டு நல் அடியோர்⋆
வானார் இன்பம் இங்குற வருதி⋆
ஓர் உயிர் உலகுக்கென்னு நீ திருவொடு⋆
ஏர் உயிர் எல்லாம் ஏந்தி இன்புறுதி⋆
யாவரும் அறியாதெங்கு நீ கரந்து⋆
மேவுருச் சூழ்ந்து வியப்பினால் மிகுதி⋆
கொண்டிட எம்மை அடைக்கலம் உலகில்⋆
கண்டிலம் கதி உனை அன்றி மற்றொன்றும்⋆
பல் வகை நின்ற நின் படி அனைத்தினும்⋆
159 தொல் வகை காட்டும் துணிந்து தூ மறையே (4)

தேசிக பிரபந்தம் - நவமணிமாலை

மகரம் வளரும் அளவில் பௌவம் அடைய உற்றலைத்தனை⋆
வடிவு கமடம் என அமர்ந்து கிரிதனைத் தரித்தனை⋆
மலியும் அசுரன் உரம் இடந்து வசுதையைப் பெயர்த்தனை⋆
வலிகொள் அவுணன் உடல் பிளந்து மதலை மெய்க்குதித்தனை⋆
பகரும் உலகம் அடி அளந்து தமர்களுக்களித்தனை⋆
பரசு முனிவன் வடிவு கொண்டு பகைவரைத் துணித்தனை⋆
பணிய இசைவில் தசமுகன் தன் முடிகள் பத்துதிர்த்தனை⋆
படியும் உருவில் வரு பிலம்ப அசுரனைத் தகர்த்தனை⋆
நகரிதுவரை என உகந்து வரை கரத்தெடுத்தனை⋆
நடமொடியலு பரியில் வந்து நலிவறுக்கவுற்றனை⋆
நலியும் வினைகள் செகு மருந்தின் நலம் உறைந்த வெற்பினை⋆
நணுகு கருட நதி கிளர்ந்த புனல் உகப்பில் வைத்தனை⋆
அகர முதல உரை கொள் மங்கை கணவனுக்களித்தனை⋆
அடையும் வினதை சிறுவன் உய்ய அருள் கொடுத்துயர்த்தினை⋆
அடியும் அணையும் எனும் அனந்தன் அடி தொழக் களித்தனை⋆
160 அவனி மருவு திருவயிந்தை அடியவர்க்கு மெய்யனே (2)

॥ திருநரசிங்கன் திருவடிகளே சரணம் ॥